[1981 மார்ச் 27]

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

அ. நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு * எடுத்துக்கொள்ளப் பெற்றது.

[முற்பகல் 11-00]

பிரிவு 2, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 30/1981) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆ. நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 31/1981) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

---

* 1981-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, 3, அட்டவணை, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேர வையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 31/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

6. வரவு செலவுத் திட்டம் 1981-82, விவாதம்—தொடர்ச்சி.

*** திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கையினை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அறிக்கையிலே முதன் முதலாக வறட்சியைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற சட்டமன்றப் கூட்டத் தொடரின் போது, நம்முடைய அமைச்சர்கள் இங்கே சொன் னார்கள், குடிதண்ணீர் பிரச்சினைக்கு முதன்மை முக்கியத் துவம் கொடுத்து, எல்லா இடங்களிலும், என்ன வறட்சியாக இருந்தாலும் இந்த மாதம் 25 ஆம் தேதிக்குள் குடிதண்ணீர் பிரச்சினை முடித்து வைக்கப்படும் என்று. அவர்கள் அப்படிச் சொன்னதை முடித்துக் கொடுக்கும் வகையில், ஆங்காங்கே உள்ள கலெக்டர்களும், டி.டி.ஓக்களும், கமிஷனர்களும் மற்றும் உள்ள ரெவின்யூ அதிகாரிகளும் முடிக்கிவிடப்பட்டிருக்கிறார்கள். அதன் விளைவாக இந்தப் பிரச்னை ஓரளவிற்கு தீர்க்கப்பட்டது. என்னுடைய தொகுதியான நிலக்கோட்டையில்கூட மிக மிக எச்சரிக்கையாக அந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில்